## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2019—ம் ஆண்டு நவம்பர் மாதம் தேதி ( 11.11.2019) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது .

கூட்டத்தில் கலந்து கொண்டவர்

திரு.கு.மணி
தனி அலுவலர் / ஆணையாளர்
குளச்சல் நகராட்சி

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 09.11.2019—ம் தேதிய தொலைபேசி செய்தியில் குளச்சல் நகராட்சி பகுதியில் இயற்கை இடர்பாடுகள் வடகிழக்கு பருவமழையினால் சேதமடைந்துள்ள சாலைகளை ரூ.136.00 இலட்சம் மதிப்பீட்டில், சீரமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குளச்சல் நகராட்சி பகுதியில் பருவமழையினால் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைக்க கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சி – வார்டு எண்.12,13 துறைமுகத்தெருவில் மற்றும் வார்டு எண்.15 மாதா காலனி சாலை (துறைமுக யூனியன் அலுவலகம் அருகில்) ஆகியவற்றில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 30.00 |
| 2 | குளச்சல் நகராட்சி – வார்டு எண்.17,20 & 21 மார்க்கெட் பின்புற சாலை, இலப்பவிளை பள்ளிக்கூடம் சாலை மற்றும் பண்டகசாலைபுரம் சாலை ஆகியவற்றில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 17.00 |
| 3 | குளச்சல் நகராட்சி – வார்டு எண்.5 & 6 கொட்டில்பாடு பிரதான தெருக்களில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் | 28.00 |
| 4 | குளச்சல் நகராட்சி – வார்டு எண்.18 வாய்க்கால் தெருவில் சிமெண்ட் காங்கிரீட் சாலை அமைத்தல். | 19.85 |
| 5 | குளச்சல் நகராட்சி – வார்டு எண்.4 குழந்தை யேசு காலனி, கே.எஸ்.எஸ்.எஸ் காலனி & காரிதாஸ் காலனி ஆகியவற்றில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 22.50 |
| 6 | குளச்சல் நகராட்சி – வார்டு எண்.1 வடக்கு கள்ளியடைப்பு பகுதியில் பேவர் இயந்திரத்தை பயன்படுத்தி தார் தளம் அமைத்தல். | 10.30 |
| 7 | குளச்சல் நகராட்சி – வார்டு எண்.4 செட்டியத்தெரு மற்றும் குறுக்குத்தெரு ஆகியவற்றில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 8.40 |
| | **மொத்தம்** | **136.00** |

மேற்காணும் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகையினை, முழு மானியமாக திட்டநிதியின் கீழ் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க கேட்டு, விரிவான திட்ட

அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்ப மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1430/2019/இ1

**தீர்மானம் எண்.2154 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் எண்.2

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தள்ளுவண்டி பழுதுஏற்பட்டு குப்பை அள்ள முடியாத நிலையில் அதனை சரி செய்யப்பட்ட வகையில் ரூ.2900/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.3034/2014/எச்1

**தீர்மானம் எண்.2155 அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண்.3

இந்நகராட்சி கணினி பிரிவில் பயன்பாட்டிலுள்ள 5 KVA மற்றும் 3 KVA UPS களின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) முறையே 02.11.2019 மற்றும் 05.11.2019-ல் முடிவடைந்து விட்டதால், மேலும் ஓராண்டுக்கு ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்காக மேற்படி UPS களின் விநியோகஸ்தரரான Novateur Electrical & Digital Systems Pvt ltd., நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி UPS களின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்த காலத்தை தொடர்ந்து ஓராண்டுக்கு முறையே 03.11.2019 முதல் 02.11.2020 மற்றும் 06.11.2019 முதல் 05.11.2020 வரையும் கீழ்காணும் கட்டணத்தின் படி நீட்டிப்பு செய்வதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. 5 KVA UPS 03.11.2019 - 02.11.2020 ரூ.8850
2. 3 KVA UPS 06.11.2019 - 05.11.2020 ரூ.6490

மொத்தம் - ரூ.15340

**அ.கு** அலுவலக பணிகளில் UPS களின் முக்கியத்துவம் கருதி தொடர்ந்து ஓராண்டுக்கு வருடாந்திர, ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து Novateur Electrical & Digital Systems Pvt ltd., நிறுவனத்துக்கு வழங்கி அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3562/A2/2007

**தீர்மானம் எண்.2156 அனுமதிக்கப்பட்டது**

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் **2019–ம்** ஆண்டு நவம்பர் மாதம் தேதி **( 29.11.2019)** வெள்ளிக்கிழமை பிற்பகல் **4.00** மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது **.**
கூட்டத்தில் கலந்து கொண்டவர்

திரு.கு.மணி
தனி அலுவலர் / ஆணையாளர்
குளச்சல் நகராட்சி

**பொருள் எண்.**1

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 75 K 6526 -ல் பொருத்தப்பட்டுள்ள Air Conditioner - ல் பழுது ஏற்பட்டு, சரியாக இயங்காத நிலையில், மேற்படி வாகனம் அலுவலகப் பணிகளுக்காக அதிகமாக பயன்பாட்டில் உள்ளதால், Air Conditioner-ஐ பழுது நீக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, நேரடியாக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Devi Air cool Services, Nagercoil | ரூ.2300/- |
| 2. | M/s.Ozone Air conditioner Services, Asaripallam | ரூ.1980/- |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில், M/s.Ozone Air conditioner Services, Asaripallam நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

7057-1/2011/இ1

**தீர்மானம் எண்.**2157 **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.**2

இந்நகராட்சியில், தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் : 2019-20-ன் கீழ், ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள சாலை மேம்பாட்டு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான தமிழ்(மக்கள் குரல்) மற்றும் ஆங்கிலம் (Financial Express) நாளிதழ்களின் அக்டோபர் ரூ.38,116/-ஐ வழங்க கேட்டு M/s.Mark Media Communications, சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் எண்.774 நாள் 23.10.2019 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை தற்போது நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும், திட்ட நிதி பெறப்பட்ட பின் விளம்பர கட்டணத்திறகாக செலுத்தப்படும் தொகையினை நகராட்சி கணக்கில் ஈடு செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1120/2019/இ1

**தீர்மானம் எண்.**2158 **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குட்பட்ட பண்டகசாலைபுரம், இலப்பவிளை, ஆசாத்நகர் ஆகிய பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் வழியாக பள்ளிரோடு வந்து AVM கால்வாய் வழியாக சென்று கடலில் கலக்கிறது. AVM கால்வாயில் தூர் நிரம்பியுள்ளதால் தண்ணீர் வீடுகள் மற்றும் பள்ளிவாசலில் புகுந்து சுகாதார கேடு ஏற்படும் வண்ணம் உள்ளதால் AVM கால்வாயில் உள்ள அடைப்புகளை தற்காலிகமாக அகற்றி மழைநீர் தேங்கா வண்ணம் ஹிட்டாச் எந்திரம் மூலம் பள்ளிவாசல் முதல் பீச் ஜங்சன் வரை தூர் வாருவதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.10000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1120/2019/இ1

**தீர்மானம் எண்.2159 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் 10mm பி.வி.சி குடிநீர் குழாய் அமைத்தல், பூக்குழி பகுதியில் 80mm சுவிஸ் வால்வு அமைத்தல் மற்றும் துறைமுகத்தெரு வெற்றித்தூண் பூங்காவிற்கு தேவையான 20mm குழாய் வாங்குதல் ஆகிய பணிகளை ரூ.72,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2122 நாள் 30.08.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 06.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.80% அதிகம் (ரூ.70,908.95/-) |
| 2 | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.12% குறைவு (ரூ.70,255.11/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.12% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.821/2019/இ1

**தீர்மானம் எண்.2160 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில், ரூ.548.35 இலட்சம் மதிப்பீட்டில் உப்பளம் பகுதி உரக்கிடங்கு வளாகத்தில் நடைபெற்று வரும் கசடு கழிவு நீர் மேலாண்மை திட்டப்பணிகளில் (Faecal Sludge and Septage Management Scheme: 2018-19) மண் நிரப்புதல் பணிக்கு தேவையான 16365.00 cu.m அளவு மண்ணை தனியார் நிலத்திலிருந்து எடுப்பதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை , அரசு செயலர் / நகராட்சி நிர்வாக ஆணையர்/ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட கனிம வளத்துறை உதவி இயக்குநர்/ நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோருக்கு எதிராக திரு.D.ஜெஸ்டின் சுந்தர் சிங், ஒப்பந்ததாரர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண்.W.P(MD)No.22058/2019-க்கு வேண்டி நகராட்சி தரப்பில் ஆஜரான வகையில், வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/-ஐ வழங்க கேட்டு, திரு.P.ஆதிமூல

பாண்டியன், வழக்கறிஞரிடமிருந்து கேட்பு பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566-1/2018/இ1

**தீர்மானம் எண்.2161 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் R.R எண்டர்பிறைசஸ் நிறுவனத்திற்கு 01.10.2017 முதல் 30.09.2020 வரை இரண்டு ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. மேலும் மேற்படி குத்தகை தொகை ரூ.82740/-க்கு 5% வரி உயர்வு செய்தும், கீழ்காணும் விபரப்படி குத்தகை உரிமம் புதுப்பிக்க மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

**குத்தகை தொகை விபரம்**

| | |
|---|---|
| குத்தகை தொகை | ரூ. 82740/- |
| குத்தகை தொகையில் 5% உயர்வு | ரூ.4137/- |
| சேவைவரி 18% - | ரூ. 14893/- |
| வருமான வரி 1% - | ரூ.827/- |
| ஒரு ஆண்டிற்கு தொழில்வரி - | ரூ.2500/- |
| **மொத்தம்** | **ரூ. 105097/-** |

ந.க.எண்.236/2017/அ1

**தீர்மானம் எண்.2162 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண்.12, வரிவிதிப்பு எண்.148/BD01/00002 -ஐ திரு.ரெகுபாலன் என்பவர் 12/2018 முதல் கடையை நடத்தி வந்தார். தற்போது தன்னால் கடையை நடத்த இயலவில்லை என்பதால் கடையை நகராட்சியில் ஒப்படைப்பதாக மனுவில் தெரிவித்துள்ளார். மேற்படி கடைகக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.1,00,000/- மற்றும் கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.62400/- மொத்தம் சேர்த்து ரூ. 1,62,400/- செலுத்தியுள்ளார். கடைக்கு 2019 ஜனவரி முதல் 2019 நவம்பர் வரை மாதவாடகை நிலுவையாக ரூ-67496/- உள்ளது. கடைக்கு செலுத்தியுள்ள முன்வைப்புத் தொகை ரூ.1,62,400/- லிருந்து மாதவாடகை நிலுவைத்தொகை ரூ.67496/- போக மீதமுள்ள தொகை ரூ-94904/-ஐ திரு.ரெகுபாலன் என்பவருக்கு வழங்கவும், கடையை மறு ஏலமிடவும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.2163 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின் உபகரணங்கள் போதிய அளவு இருப்பில் இல்லாத நிலையில், பாராளுமன்ற தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தால், அவசர அவசியம் கருதி, பொது மக்களின் தெருவிளக்கு புகார்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, ரூ.3,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நகராட்சி சட்ட விதி 15-ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு M/s.T.R Traders. Thazhakudy நிறுவனத்திற்கு வினியோக உத்தரவின் அடிப்படையில், வினியோகம் செய்யப்பட்டுள்ள மின் உபகரணங்களுக்கு ரூ.3,39,260/- ஐ வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி விவரங்கள் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.449/2019/இ2

**தீர்மானம் எண்.2164 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண்கள்.26,31 வரிவிதிப்பு எண்கள் 148/2016001, 148/2016002 ஆகியவற்றிற்கு 30.11.2019 டன் குத்தகை உரிமம் 3 ஆண்டுகள் முடிவடைவதாலும் மேலும் 01.12.2019 முதல் 30.11.2022 வரை மூன்றாண்டுகளுக்கு வாடகை தொகையில் 15% வரி உயர்வு செய்யவும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | கடை எண் | வாடகைதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15% வரி உயர்வு செய்த தொகை | வரி உயர்வு செய்யப்பட்ட பின்னர் வாடகை தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 148/2016001 | 26 | கிங்ஸ்லி மில்ட்டன்ராஜ் | 1000/- | 150/- | 1150/- |
| 2 | 148/2016002 | 31 | ஷீபா | 1000/- | 150/- | 1150/- |

.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.2165 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

அரசாணை (நிலை) எண்.238 நாள் 01.10.97-ன் படி, இந்நகராட்சியில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் விபத்துக்கள் இன்றி ஓட்டுநராக பணிபுரிந்த திரு.சி.சுந்தர்ராஜ் என்பவருக்கு தங்கபதக்கம் தயார் செய்வதற்காக சென்னை எழுது பொருள் அச்சுத்துறைக்கு அலுவலகம் மூலம் கடந்த 14.08.2019 அன்று RTGS மூலம் ரூ.17850/- செலுத்தப்பட்டது. அதன் பின்னர் கூடுதலாக ரூ.1450/- செலுத்துமாறு மேற்படி துறையால் தெரிவிக்கப்பட்டதால் மீதமுள்ள தொகை ரூ-1450/- திரு.சி.சுந்தர்ராஜ் ஓட்டுநரால் செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.1450/- திரு.சி.சுந்தர்ராஜ் ஓட்டுநருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1197/2018/சி1

**தீர்மானம் எண்.2166 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சியில், தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம்:2019-20-ன் கீழ், ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை - செயல்முறைகள் ந.க.எண்.17349/2019/இ3 நாள் 14.10.2019-**ன்** படி திட்ட நிதி ஒதுக்கீடு செய்து, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

மேற்காணும் சாலைப்பணிகளுக்கான மதிப்பீட்டிற்கு, தலைமை பொறியாளர், சென்னை - செயல்முறைகள் ந.க.எண்.25039-10/20A/DO2 நாள் 18.10.2019-ன் படி, தொழில்நுட்ப அனுமதி பெற்று, கடந்த 07.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் தொழில்நுட்ப உறை நகராட்சி ஒப்பந்த சீராய்வு குழு உறுப்பினர்கள் மற்றும் வருகை புரிந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு, தொழில் நுட்ப தகுதி ஆய்வு (Technical Bid evaluation) செய்யப்பட்டதில், இரண்டு ஒப்பந்ததாரர்களும் தகுதி பெற்றிருந்ததை தொடர்ந்து, 25.11.2019 அன்று விலைப்புள்ளி உறை (Price Bid) திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.ஸ்டாலின்,<br>ஒப்பந்ததாரர்,<br>மயிலாடும் பெற்றவிளை,<br>சேவியர்புரம்,<br>திருவிதாங்கோடு அஞ்சல். | மதிப்பீட்டை விட 5.20 % அதிகம்<br>(ரூ.91,00,431/-) |
| 2. | திரு.C.செல்லநாடார்<br>ஒப்பந்ததாரர்,<br>27-4, அணஞ்சிகோடு,<br>கருங்கல் அஞ்சல். | மதிப்பீட்டை விட 1.00 % குறைவு<br>(ரூ.85,63,215/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.செல்லநாடார், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 1.00% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று Letter of Acceptance (LOA) வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1120/2019/இ1

**தீர்மானம் எண்.2167 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில், திரு.A.செந்தில்குமார் என்பவர் அரசு செயலர், நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல்துறை / நகராட்சி நிர்வாக ஆணையர்/ அரசு உரிமையியல் வழக்குரைஞர் (The Govt. pleader) மற்றும் லூர்து பால் மவுரியா ஆகியோருக்கு எதிராக தொடர்ந்து வழக்கு எண்.WP (MD) எண்.8264/2019 & W.M.P (MD) Nos.11124,11181 மற்றும் 6487/2019 ஆகியவற்றின் மீதான 09.07.2019 ஆம் தேதிய தீர்ப்பில்,

**" The District Municipalities / Town Panchayats are at liberty to engage the Counsels of their choice to prosecute and defend their cases filed**

**against them and they are also at liberty to engage the counsels referred to in the impunged Govt.order"**

என உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி தொடர்பான வழக்குகளில், நகராட்சி வழக்கறிஞர் திரு.ஆதிமூல பாண்டியன் அவர்கள் ஆஜராகி, நகராட்சிக்கு சாதகமாக வழக்குகளை முடித்து தந்துள்ளதால், மேற்காணும் தீர்ப்பின் அடிப்படையில், குளச்சல் நகராட்சி தொடர்பான அனைத்து வழக்குகளுக்கு திரு.ஆதிமூல பாண்டியன், வழக்கறிஞரை நியமனம் செய்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1578/2017/இ1

**தீர்மானம் எண்.2168 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

சொத்துவரியினை 01.04.2018 ஆம் தேதி முதல் சீராய்வு செய்திட வெளியிடப்பட்ட அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.218 ஆகியவைகளை நிறுத்தி வைத்து சொத்துவரி சீராய்வுக்கு முந்தைய சொத்துவரியினை வசூலித்திடவும் சொத்துவரி சீராய்வு குறித்து அரசு செயலாளர் நிதித்துறை (செலவினம்) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையின் பேரில் அரசினரால் சொத்துவரி சீராய்வு குறித்து முடிவு செய்யப்படும் என வெளியிடப்பட்ட அரசாணை (எம்.எஸ்) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA.IV) நாள் 19.11.2019 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு**

பதிவு செய்யலாம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.11.2019 ஆம் தேதிய ந.க.எண்.40032/2012/ஆர்1 என்ற எண்ணிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு சொத்துவரி மண்டலங்கள் பகுப்பாய்வு (Zone rate) மற்றும் 2017-18 ஆம் ஆண்டடில் மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மறு அளவீடுகள் (Under assessed and Building with changes in usage) மற்றும் நகராட்சி மண்டல பகுப்பாய்வின்படி (Zone rate) வரி உயர்வு செய்யப்பட்டதையும் நிறுத்தி வைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1249/2018/அ1

**தீர்மானம் எண்.2169 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.P.பாலகிருஷ்ணன் முன்வைப்பு தொகை வழங்க கேட்டு தொடரப்பட்ட வழக்கு எண். 121 of 2019 இந்நகராட்சி சார்பில் வாதாடிய வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலபாண்டியன் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.10000/- வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.786/2017/இ1

**தீர்மானம் எண்.2170 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

தமிழ்நாடு தேர்தல் மறுவரையறை ஆணையம் உத்தரவின் படி, குளச்சல் நகராட்சியில் உள்ள 24 வார்டுகளையும் மறுவரையறை செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போது உள்ளாட்சி தேர்தல் ஆரம்ப கட்டப்பணிகள் நடைபெற்று வரும் நிலையில் Zone Map மற்றும் Route map தயார் செய்வதற்கு ஏதுவாக வார்டு மறுவரையறை வரைபடம் GIS Town Map shap file with ward Boundary, Roads and ward Boundary demarcation as per new ward delimitation by using survey and Geo tagging with Geo tagging techniques சர்வே முறையில் தயார் செய்ய வேண்டி உள்ளது. எனவே,இதற்கான விலைப்புள்ளி கோரப்பெற்றதில் DB infosolutions சென்னை நிறுவனம் GST தவிர்த்து வார்டு 1-க்கு ரூ.3050/- எனவும், Parthi Infotech திருப்பூர் நிறுவனம் GST தவிர்த்து வார்டு 1-க்கு ரூ.3650/- எனவும் Jothi Infotech கோயம்புத்தூர் நிறுவனம் GST தவிர்த்து வார்டு 1-க்கு ரூ.3800/- எனவும் விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. எனவே, இதில் குறைவான பட்டியல் தொகை ரூ.3050/-தந்துள்ள DB infosolutions சென்னை நிறுவனத்திற்கு இப்பணியினை செய்ய உத்தரவு வழங்கவும், பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு வரைபடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பட்டியல் படி தொகை வழங்கவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1834/2017/TPI

**தீர்மானம் எண்.2171 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரின் 18.7.2019 ஆம் தேதிய பேரிடர் மேலாண்மை குழு ஆய்வு கூட்டத்தில், இந்நகராட்சிக்குட்பட்ட பண்டாரவிளை பகுதியில் அமைந்துள்ள அரசு நடுநிலைப்பள்ளி வளாகத்தில், பொதுப்பணி துறையின் பராமரிப்பின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை மையத்தில் உள்ள 15KVA Generator-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை, பொது நலன் கருதி, நகராட்சி நிதியிலிருந்து பழுது நீக்கம் செய்ய தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி ஜெனரேட்டரை பழுது நீக்கம் செய்யவும், புதிதாக 100 AH மின்கலம் வாங்கி பொருத்தவும், மின் இணைப்பு பகுதியில் (Electrical line) ஏற்பட்ட பழுதுகளை சரி செய்யவும் மற்றும் Door lock Set புதிதாக அமைப்பதற்கும், மதிப்பீடு ரூ.25,000/- க்கு தயார் செய்யப்பட்டு, மேற்படி பணிகளை நகராட்சி சட்ட விதி 15-ன் கீழ் மேற்கொண்ட வகையில், அதற்கான செலவினம் ரூ.25,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து M/s.R.J Power, Marthandam நிறுவனத்திற்கு வழங்க உள்ள விவரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.992-1/2019/இ2

**தீர்மானம் எண்.2172 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு பகுதிகளில் பொருத்தும் தெருவிளக்கு பிட்டிங்குகள் கடற்கரை ஈரக்காற்று படிவதால் பிட்டிங்குகள் விரைவிலேயே துருப்பிடித்து திரும்ப உபயோகப்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே பழுதுபட்ட பிட்டிடங்குகளை மாற்றுவதற்கு தற்போது தேவையான பிட்டிங்குகள் இருப்பில் இல்லாத காரணத்தால் கீழ்க்கண்ட விவரப்படி உள்ள மின் உபகரணங்களை வாங்குவதற்கும், மேலும் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள Council Hall -ல் புதியதாக 3 எண்ணம்

மின்விசிறிகள் வாங்குவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2,00,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தேவைப்படும் மின் உபகரணங்கள்**

1. 4 Feet Tube light fittings - 100 Nos.
2. 250 W sodium Vapour Bulb - 50 Nos.
3. 250 W Sodium Vapour choke - 50 Nos.

ந.க.எண்.1506-1/2019/இ2

**தீர்மானம் எண்.2173 அனுமதிக்கப்பட்டது.**